தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கிழமை இதழ்)

தொகுதி-3 | தி. பி. 2016 | கடகம் 12 | (28-7-1985) | 65 காசுகள் | இதழ் எண் : 61 | பகுதி 25-27

திம்புப் பேச்சில் தென்பில்லை!

பஞ்சாப் முடிவு தமிழீழக் கோரிக்கையில் தாக்கமுண்டாக்கும்!

இராசீவின் நெருக்கடி நிலைக் கருத்து இந்தியாவின் எதிர்காலத்தைச் சீர்குலைக்கும்!

அரசின் கருத்துகளுக்கு ஒத்துப்போய்த் தங்கள் நலன்களைக் காத்துக்கொள்ளும் தந்நலக்காரர்கள் எப்பொழுதுமே இருப்பர்!

எந்தச் சூழலிலும் மக்களுக்கு நலஞ்செய்யும் கருத்துகளைத் துணிவுடன் கூறுபவர்களே நாட்டின் வளர்ச்சியை நிலைநிறுத்துகிறார்கள்!

மீண்டும் நெருக்கடிநிலை வந்தால், நீங்க நீண்ட காலம் ஆகும்!

இந்திராவை விட, இராசீவ் வல்லதிகாரத்தை மிகுதியும் விரும்புகிறார்!

நாட்டின் இன்றைய நிலைகள் பற்றிப் பாவலரேறு!

பூடான் மாநிலத்தில் உள்ள திம்பு நகரில் தமிழீழ ஒப்புரவுப் பேச்சுகள் ஒருவாறு தொடங்கி, மீண்டும் ஆகத்து 12-இல் நடைபெறும் என்று அறிவிக்கப்பெற்றுள்ளது. இடையில் கடந்த சூன் மாதம் 18-ஆம் பக்கல் முதல் **'பகைச் செயல் நிறுத்தம்'** (பலர் 'போர் நிறுத்தம்' என்று கூறுவது சரியன்று) இலங்கை அரசு, தமிழீழப் போராளிகள் ஆகிய இரு தரத்தும் கடைப் பிடிக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது. ஆனால், திம்புப் பேச்சுகள் நடந்துக் கொண்டிருக்கும் அதேபொழுது இலங்கை அரசு, அடக்கு முறைகளையும் வன்முறைகளையும் நடத்திக் கொண்டுதான் இருந்தது. எனவே அவற்றை எதிர்கொள்ளவும், எதிர்த்தும் விடுதலைப் போராளிகளும் சில நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருந்தது. ஆனால், செயவர்த்தனே அரசு வழக்கம்போல் குற்றத்தையும், ஒப்பந்த மீறலையும் போராளிகள் மீதே சுமத்தியது. இதிலிருந்தே அது நாணயமாக நடந்து கொள்ளவில்லை என்பதும், அதன் கரவான நடவடிக்கையும் வஞ்சகமான எண்ணமும் தெளிவாக விளங்குகின்றன.

மேலும், இரு தரப்பினரும் பேசி முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு மாறாக, இலங்கை அரசு தான் ஒரு முடிவை எடுத்துக்கொண்டு பேச முற்படுகிறது. இந்நிலை எப்படிச் சரியானதாக இருக்க முடியும்? எனவே, திம்புப் பேச்சால் எவ்வகையான நன்மையும் விளையப் போவதில்லை என்பதை இப்பொழுதே நாம் கூறிவிட முடியும். இதுவும் ஓர் அரசியல் கண்துடைப்பே!

போராளிகள் தமிழீழத்தையே விரும்புகின்றனர். ஆனால், அரசோ, சில அதிகாரங்களை மட்டுமே பகிர்ந்து கொள்ள விரும்புகிறது. மற்றபடி சிங்களமே ஆட்சிமொழி, புத்த மதமே அரசு மதம்; நாடு பிரிக்கமுடியாதது; இலங்கை சிங்களவருடைய நாடே, என்னும் முடிவுகளில் இலங்கை அரசு உறுதியும் வீறாப்பும் காட்டுகிறது. இந்நிலையைத் தவிர்க்கத்தானே விடுதலை விரும்பும் இளைஞர்கள் போராடுகிறார்கள். எனவே, ஒப்புரவின் (சமாதானத்தின்) நடுப்புள்ளியையே எவரும் எட்டமுடியாமல் போய்விடும் என்பதில் ஐயமே இல்லை, ஆனால், இலங்கை அரசு இப்பேச்சில் எந்தவகையான முடிவையும் எதிர்பார்க்கவில்லை என்பதை அதன் ஒப்பந்த மீறல் நடவடிக்கைகளே உறுதி செய்துவிட்டன. இனியென்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது? இந்நிலையில் ஏன் இலங்கை அரசு பேச்சைத் தொடர விரும்புகிறது! உண்மையில் அது பேச்சைத் தொடர விரும்புவது ஒப்புரவுக்காக அன்று; இவ் விடைக்காலத்தில் தன்னை ஒரு பெருந் தாக்குதலுக்கு அணியப்படுத்திக் கொள்ளவே ஆகும் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இதற்கிடையில், கடந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக இழுத்துப் பறித்துக்கொண்டு, ஏராளமான உயிர்களைப் பலி வாங்கிய பஞ்சாப் சிக்கலில் இப்பொழுது திடுமென ஒரு தீர்வு ஏற்பட்டுள்ள நிலை மிகவும் கரவானது; கொடுமையானது. லோங்கோவால் ஒரு மதத் தலைவரே தவிர, அரசியல் தலைவரல்லர். அவர் இந்திராவின் கையாளாக முன்பே செயல்பட்டவர். அவரைக் கையோங்கச் செய்வதற்காகவே, பிந்தரன்வாலேயைத் தீர்த்துக் கட்டினார் இந்திரா. பிந்தான்வாலே கலிசுத்தான் அமையவேண்டும் என்று போராடியவர். அவர் பின்னால் பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராளிகள் இருந்தனர் அவர்களைப் படிப்படியாக வலுவிழக்கச் செய்யும் உத்திக்காகவும் இந்திய மக்களிடம் பிந்தரன்வாலே ஒரு பிரிவினைக்காரர், இந்துமதத்தை வெறுப்பவர் என்னும் கருத்து பரவுவதற்காகவுமே, அவரை இந்திரா ஆதரிப்பவர் போல் வளரவிட்டார். ஆனால், இந்திராவின் கருத்து, கலிசுத்தான் என்னும் அவருக்கு வேண்டாத மரத்தை அடியோடு வெட்டியெறிய வேண்டும் என்பதுதான். லோங்கோவால் சீக்கியர்களின் எட்டப்பன்! உடனடியாக இதில் தீர்வு ஏற்பட்டால், சீக்கிய இளைஞர்களின் எதிர்ப்பைக் கடுமையாக எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதற்காகவும் கலிசுத்தான் விடுதலைப் போராளிகளைச் சிறிது சிறிதாக அடக்கி ஒடுக்கவேண்டும் என்பதற்காகவுமே இராசீவ் காந்தி இந்திரா மேற்கொண்ட மெத்தனப் போக்குத் தந்திரத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். இனி, இறுதியாக இப்பொழுது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தப் பார்க்கவே, பஞ்சாப் சிக்கலுக்கு லோங்கோவாலுடன் விரைவு விரைவாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார். இதில், ***அந்த இரண்டாவது மாங்காய் எது? அதுதான் தமிழீழம்!***

இந்தியாவின் தேசிய ஒருமைப் பாட்டுக் கருத்துப்போலவே, இலங்கையில் செயவர்த்தனாவும் தேசிய ஒருமைப்பாடு பேசுகிறவர் இரண்டு நாட்டையும் பார்ப்பனீய முதலாளியமே ஆட்சி செய்கிறது: எனவே, இவ்விரண்டின் ஒன்றில் பிரிவினை ஏற்பட்டால், அது மற்ற நாட்டிலும் ஏற்பட வாய்ப்பளித்து விடும் என்பதையும், அவ்வாறு ஏற்படவிடக் கூடாது என்பதையுமே, கடந்த சூன் மாதத்தில் இந்தியா வந்திருந்தபொழுது, செயவர்த்தனாவும்-இராசீவும் பேசி முடிவு செய்திருக்க வேண்டும். இப்பொழுது அவ்விரண்டு முடிவுகளில் ஒன்று வெளியாகி விட்டது இன்னொரு முடிவான தமிழீழக் கோரிக்கையில் ஏற்படவேண்டிய தீர்வு, திம்புப் பேச்சின் இறுதியில் அறிவிக்கப்பட இருக்கிறது. அம் முடிவுக்கு தமிழீழ விடுதலைப் போராளிகள் இசையாவிட்டால், இரண்டு நாட்டு அரசின் தாக்கங்களுக்கும் அவர்கள் ஆளாகவேண்டியிருக்கும் என்பதே, இறுதியில் இந்தியா அவர்கள் முன் எடுத்து வைக்கப்போகும் தீர்வு. எனவே, பஞ்சாபின் முடிவு தமிழீழக் கோரிக்கைக்குத். தாக்கமாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

மற்றும் இராசீவ் நெருக்கடிநிலைமையைக்கொண்டு வரப் போவதாக அறிவித்திருப்பதும் இதை உறுதி செய்கிறது. மற்றபடி, பஞ்சாப் சிக்கலுக்காகவே இராசீவ் நெருக்கடி நிலையைக் கொண்டுவரவேண்டியிருக்கும். ஏனெனில் அதுவே இப்பொழுது நாட்டில் உள்ள சிக்கல்கள் அனைத்திலும் முகாமையானதும், தொடர்ந்து தொல்லை தரக்கூடியதும், ஏன், இராசீவ் காந்தியின் உயிருக்கே ஏதம் விளைவிக்கக் கூடியதுமான சிக்கல். இனி, அதில்தான் இப்பொழுது ஒரு தீர்வு ஏற்பட்டு விட்டதே பின்னர் எதற்கு நெருக்கடி நிலைபற்றிய முத்தாய்ப்பு என்றால், அது தமிழீழச் சிக்கலை வலிந்து தீர்ப்பதற்கே ஆகும். அதே சமயம் அதற்கான தேவையும் இன்னும் அசாம், நாகாலாந்து, மிசோரம், ஒரிசா முதலிய மாநிலங்களிலும் உள்ளது. அவற்றிலும் இந் நெருக்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

தொடர் - 14

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு

எனவே 'ஒழுக்கம்' என்னும் தமிழ்ச்சொல், தோர் நின்று ஒழுகுதல், நெறிப்பட நடத்தல் நடத் தையில் வழுவு படாதிருத்தல் என்னும் மனவுணர்வு சான்ற செயலாகப் பொருள் பெறுகிறது. மனத்தில் உள்ள நல்லுணர்வின் அடிப்படையே இப்புறச் செயலை வரையறுக்கிறது மனத்தின் கோணல் அல்லது எண்ணத்தில் நேர்மையில்லாததிருத்தல், செயலில் கோணலை அல்லது நேர்மையில்லாத தன்மையை உருவாக்குகிறது. அதனால்தான் 'மனத் துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்று வரையறுத்தார் பெரும் புலவர் திருவள்ளுவர். மனத்துக்கண் மாசில்லாதிருத்தல் ஒருவர் நடை முறையால் வெளிப்படுகின்றது.

இவ்விடத்தில், ஒருவன் அல்லது ஒருத்தி மனத் துக்கண் மாசில்லாமல் இருக்கிறான் அல்லது இருக்கி ருள் என்பதை, அவனின் அல்லது அவளின் நடை முறைகளால் தெரிந்து கொள்கிறோம். ஆனால் எல்லாருடைய நடைமுறைகளையும் அவ்வாறு எடையிட்டு விட முடியுமா என்று பார்த்தல் வேண்டும். மனத்தது மாசாக, மாண்டார் போல் (பெருமைக்குரியவர்போல்)நடந்து கொள்பவர்களே இவ்வுலகில் மிகுதியானவராவர். இம் மனக்கோணலை நாம் எளிதில் எடையிட்டு விட முடியாது. அதனால் தான், 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம் கருமமே கட்டளைக் கல்' என்றும் 'ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டொ ழுகின் உண்டு' என்றும் திருவள்ளுவப் பேராசான் வரையறை செய்கிறார். ஒருவர் தன்னைத்தானே நெறிப்படுத்திக் கொண்டு வாழும் நல்ல மனப் பண்பியலையே ஒழுக்கம் என்று கூறுகிறது திருவள்ளுவம்.

நல்ல மனப்பண்பியலை ஒருவர் தம்மாலும் நெறிப்படுத்திக் கொள்ள இயலும்; தாம் சூழ்ந் திருக்கும் குமுகாயத்தாலும் நெறிப்படுத்த இயலும். தாம் தவறுகிறபொழுது குமுகாயம் அங்கே குறுக் கிடுகிறது; குமுகாயம் தவறுகிறபொழுது தாம் அங்கே குறுக்கிட்டு, முடிந்தால் அதை நெறிப்படுத் தவும், முடியாவிட்டால் தாம் அதனின்றும் விலகி நின்று, தம் தனிப்பட்ட நெறியைக் காத்துக் கொள்ளவும் நேர்கிறது

எனவே ஒருவருடைய தனிப்பட்ட ஒழுக்கத் திற்கு ஒரு பக்கம் அவரும், மறுபக்கம் குமுகாயமும் காரணமாகிறது தனிப்பட்ட ஒருவர் குமுகாயத்தி னின்று மாறுபட்டுத் தம் ஒழுக்க நெறிகளைக் காத் துக்கொள்ள வேண்டுமானால் அவர் வலிந்த மன வுணர்வுடையவராக இருத்தல்வேண்டும். •வ்வலிந்த மன வுணர்வை எத்தனைப்பேர் கொண்டிருப்பர் என் பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

காலத்தால், இடத்தால் வளர்ந்து வரும் மன வியல், அறிவியல், வாழ்வியல் கூறுகளே, குமுகாய நெறிமுறைகளைச் சிதைவுக் குள்ளாக்குகின்றன. குமுகாயம் சிதையுமிடத்துத் தனிப்ப ட ஒருவரின் நடைமுறையும் சிதையத் தொடங்குகிறது.

ஒரு காலத்தில், கைம்பெண் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதே நல்லொழுக்கம் என்று பாராட்டினது இக் குமுகாயம் பெண்கள் படிக்கா மல் இருப்பது, குடும்பத்தை விட்டு வெளியே பணிக்குப் போகாமலிருப்பது முதலியவையே நல் லொழுக்கம் என்று கொண்டிருந்தோம் ஆனால் இன்று அந் நெறிமுறைகள் தகர்ந்துபோயின. ஒரு பெண் தன் கணவனுடனேயே அவன் எப்படிப் பட்டவனாக இருந்தாலும், ஒன்றி வாழ்வதையே, அவளுடைய பண்பாகவும், கற்பு நெறியாகவும் இம் மக்கள் கூட்டம் வரையறை செய்தது ஆனால் இன்று நடப்பதென்ன? பிடிக்காத கணவனை விட்டு விலகுவதையும், அவள் விரும்பினால் வேறொரு கணவனை மணந்து கொள்வதையும் வரவேற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு வருகின்றது. இவ் வாழ்வியல் நெகிழ்ச்சிகள் எங்கிருந்து தோன்றின? ஏன் அவற்றை வரவேற்றாக வேண்டிய கட்டாயத் தில் நாம் இருக்கிறோம்? குமுகாய அமைப்பு மேற் சொன்ன அடிப்படைகளால் மாறி வருகிறது. அல்லது மாற்றப்பட்டு வருகிறது இதனால் குமு காயம் தான் கொண்ட ஒழுக்க நெறிகளைக் கைவிட்டு விட்டது என்றுகூறி விட முடியுமா? இல்லை. குமுகா யம் முன்பு கொண்டிருந்த நெறிகளே, சரியானவை அல்ல என்று உணரத் தொடங்கியுள்ளது என்பது தான் உண்மையாகும்.

ஆனால் இந் நெகிழ்ச்சிகளெல்லாம் எக்காலத்தும், எவ்விடத்தும், எந்த நிலையிலும் புறநிகழ்ச்சிகளில் ஏற்படுகின்ற மாறுதல்களே ஆகும் இவற்றாலெல் லாம் ஒருவரின் தவறான நடைமுறையை நாம் வர வேற்றுவிட முடியாது. அறிவியல் எந்த அளவு வளர்ந்தாலும், வாழ்வியல் எந்த நிலையில் மாறுதலைப் பெற்றாலும், மனவியல் சிறப்புகளை அழித்துவிட முடியாது மனவியல் என்பது மாந்த மீமிசைக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே என்றும் வரை யறை செய்யப்பெறுகிறது. இந்த நிலையை இன்னும் சற்று ஆழமாகப் பார்க்கலாம்.

ஒருவர் ஏன் மனவியலுக்குப் பொருத்தமாக நடக்க வேண்டும்? மனவியல் என்பது என்ன? அது மட்டும் எவ்வாறு நிலையானதாக இருந்து விட முடியும்? மாறிக் கொண்டிருப்பதுதான் உலக இயங் கியல் மாறாதது என்பது எதுவுமே இல்லை மாறாத கொள்கை என்பது ஒன்றிருக்குமானால், அஃது அனைத் தும் மாறிக் கொண்டிருப்பது என்னும் கொள்கையே ஆகும்' என்கிறார் மார்க்சு. இதன் பொருளென்ன? மாறிக் கொண்டிருப்பது தான் இயற்கை மாறா திருப்பது இயற்கை இல்லை என்பதுதான்

எனவே மார்க்சு கொள்கைப்படி உலகிலுள்ள பொருள்கள், அப் பொருள்களைச் சார்ந்த உயிர்கள், அவற்றின் நடைமுறைகள், யாவும் உலகின் அப் பொழுதைக்கப்பொழுதைய மாறுபாடுகளுக்கேற்ப மாறுபடவே செய்கின்றன. மக்களின் நடைமுறை யும் இம் மாறுதலுக்குட்பட்டதே. வேறுபட்ட தன்று அஃதாவது. என்றும் மாறாத, மாற்றக் கூடாத தன்மைவாய்ந்ததன்று. மாற்றக்கூடாதவை என்று அத் தன்மைகள் இறுகலடைகின்றபொழுது, அவை மாற்றியமைக்கப் பெறுகின்றன அவ்வாறா னால் மனவியலிலும் மாற்றம் ஏற்படுகின்றதா? ஆம். மனவியல் என்பது, புறச்செயல்களை உறுதி செய் கின்றதானாலும். புறத்தாக்கங்கள் ஏற்படும் பொழுது, மனவியலும் தானாகவே மாறிவிடுகிறது இங்கு ஓர் எடுத்துக்காட்டால் இதனை விளக்குவோம்.

ஒரு காட்சியை நாம் படப்பிடிப்பானைக்(Camera) கொண்டு படமெடுக்கின்றோம். படப்பிடிப்பானை அடிப்படையாக வைத்து, நாம் காட்சிகளைச் சரி செய்கிறோம். அஃதாவது முன் உள்ளவர்களை அப்படி இப்படி அமையச் செய்கிறோம் ஆனால் அப்படி-இப் படி அமையச் செய்ய இயலாத இயற்கை காட்சிகளை படமெடுப்பதாயின் அவற்றுக்குதக்கபடி, படப்பிடிப் பானை இங்கு அங்கு நகர்த்திக் கொள்கிறோம்: அப் பொழுது சரிவரவில்லையானால், படப்பிடிப்பானில் பொருத்தியுள்ள கண்ணாடி வில்லைகளை முன் பின் நகர்த்திக் கொள்கிறோம்: அப்பொழுதுதான் புறக் காட்சிகளுக்கேற்பப் படத்திரையில் விழவேண்டிய உருவத்தின் தோற்றம் தெளிவாக, சரியாக இருக் கும்: இவ்விடத்தில், படப்பிடிப்பானுக் கேற்றபடி, புறப்பொருள்கள் நகர்த்தப்பட அல்லது சரிசெய்யப் பட வேண்டியிருந்தால் அவற்றையும் அவை அப்படி இப்படி நகர்த்திச் சரிசெய்யப்பட முடியாத நிலை யில், படப்பிடிப்பானையும், தேவையானால் அதன் கண்ணாடி வில்லைகளையும் சரிசெய்து கொள்ளுகிறோம்.

இப்படித்தான் நம் மனவியலும் சரி செய்யப்பட வேண்டும். மேலும் தனிப்பட்ட மனவியல் என்பது வேறு. குமுகாய மனவியல் என்பது வேறு: நாம் எவ்வளவுதான் கல்வி முதலிய அறிவுநிலையில் மேம் பட்டவர்களாக இருப்பினும். நம் மனங்கள், அவற் றின் உணர்வு நிலைகள் அனைத்தும் ஒன்றுபோலவே இருக்கும் என்று சொல்லிவிட முடியாது: அவ்வாறு ஒன்றுபோல் இல்லையாயினும், மிகவும் வேறுபட்டும் இருக்கும் என்றும் கூறிவிட முடியாது. அவை தம்முள் சிறுபான்மை ஒத்தும் பெரும்பான்மை வேறுபட்டும் இருக்கும்: அல்லது பெரும் பான்மை ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் இருக்கலாம். இத்தன்மையும் கூட ஆள்களின் எண் ணிக்கைக்கும் அவர்களின் மனவியல், அறிவியல், உடலியல். கால, இடங்களுக்கேற்ப மாறுபட்டும் வேறுபட்டும் இருக்கும்: இவ்வகையில் நாம் அனை வரும் தனித்தனியானவர்களே! ஆனாலும், குமுகாய அமைப்பை வலியுறுத்துவதற்காகவும்நாம்அனைவரும் ஒருவரோடொருவர் இணைந்துதான் வாழவேண்டும் என்றகட்டாயத்திற்காகவும், நம்மில்ஒத்துப்போகும் பெரும்பான்மைத் தன்மைகளை அல்லது குணங்களைக் கொண்டு, நாம் குமுகாய நெறிமுறைகளை வகுக் கிறோம். என்றாலும், ஒரு கால இடைநிறுத்தத்தில், ஒரு கால அறிவியல், மனவியல், வாழ்வியல் வளர்ச்சி நிலையில், நமக்கு முன் உள்ளவர்கள், அல்லது நாம் நம்மில் பெரும்பான்மையும் ஒத்துப்போன, அல்லது ஒத்துப்போய்க் கொண்டிருக்கிற மன நிலைகளால், நம் முன்னுள்ளவர்கள் அல்லது நம் குமுகாய நடை முறைகளை அல்லது அறங்களை வகுத்தனர்; அல்லது வகுத்துக் கொள்கிறோம். அந்த நிலை அப்பொழு தைய படப்பிடிப்புக்குச் சரி. ஆனால் புறநிலை மாறு பாடுகள் ஏற்படும் பொழுதும் அவை சரிதாம் என்று நாம் அடம் பிடித்தல் கூடாது: அஃது அறியாமையாகும்.

அறிவு வளர்ச்சிக்குரியது, வளர்ச்சியற்ற நிலையே அறியாமையாகும். இன்னும் சொன்னால், அறிவு மாறுபாட்டுக்கும் உரியது. மாறுபாடற்ற தன்மை அறியாமையே ஆகும். வளர்ச்சி என்பதில் மாறு பாடும் அடங்கும். ஒரு குழந்தை உடலால் வளர்ச்சி யுற வுற உறுப்புகளும், தோற்றமும் மாறுபடு கின்றன. மாறுபாடு இயற்கையாக நிகழ்கிறது இதை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. நிகழ் வது மாறுபாடே தவிர, வேறுபாடன்று என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளல் வேண்டும். மாந் தக்குழந்தை வளர்ச்சியால் தோற்றம், அளவு, பொலிவு இவற்றில் மாறுபாடு அடைந்தாலும், வேறு பாடு அடைவதில்லை. அஃதாவது ஒரு மாந்தக் குழந்தை விலங்கு மாந்தனாகிவிட முடியாது. எனவே, மாறுபாடுகளை நாம் வரவேற்றல் வேண்டும்; வேறு பாடுகளை அல்ல. மாறுபாடு புறநிலை வளர்ச்சி. வேறுபாடு அகநிலை மாற்றம். அகவுணர்வு வேறு படுவதற்கு வலிவான புறத்தாக்கங்கள் வேண்டும். அவ்வேறுபாடு நிகழ இயற்கையே மாறியாகல் வேண்டும். இயற்கையும் மாறத்தான் செய்கிறது. ஆனால் அந்த மாற்றத்தை நாம் உணரமுடியாதவாறு காலமும் இடமும் பொருளும் பல நீண்ட எல்லைகளை எடுத்துக் கொள்ளும். எனவே அவற்றை நாம் உணர முடியாது. அந் நீண்ட இடைவெளியை நோக்குகையில், நம் அகவுணர்வு மாறுபாடு என்பது மிகமிக மிகச் சிறியதாகும்; நுண்ணியதாகும். அத னால்தான் அதை நாம் இல்லை என்றே சொல்லி விடுகிறோம். அஃதாவது அகவுணர்வு மாறுபடவே படாது என்று சொல்லிவிடுகின்றோம். இப்பொழுது நாம் எடுத்துக்கொண்ட செய்தியில், அகவுணர்வு' என்பது மாறுபாட்டுக்குரியதன்று என்று கூறுவ தும் இந்தப்பொருளில்தான். முதலில் இக் கருத்துகளை ஒன்றுக்குப் பலமுறை படித்துச் சிந்தித்துச் செரித்து, நாம் உள்வாங்கிக் கொள்ளுதல் வேண்டும். அப் பொழுதுதான் இங்குக் கூறப்பெறும் மனவியலை அசைவுறச் செய்யும் கருத்துகள் நன்கு உணரப் பெறும். இல்லையானால் வெறும் மேலோட்டமாகப் படிக்கும் உணர்வோட்டமில்லாத தேக்க மன நிலை உள்ளவர்களுக்கு, இங்குக் கூறப்பெறும் கருத்துகள் அதிர்ச்சிதரத் தக்கனவாகவும், ஏற்றுக் கொள்ள இயலாதனவாகவும் படும். அந்நிலை அவரவர்களின் மனக் கண்ணாடியைச் சரிசெய்து கொள்ளாத கோளாறு ஆகுமே யன்றி, புறக்காட்சிக் கோளாறோ, இயற்கையின் இயங்கியல் கோளாறோ ஆகாது என்று அறிந்து கொள்க. (தொடரும்)

நம் நாட்டில் கல்வித் துறையின் அவலநிலை!

இந்தியாவில் தொடக்கக் கல்வி!

0 இந்தியாவில் உள்ள 700 இலக்கம் குழந்தை களின் கல்வி வளர்ச்சிக்காக ஏறக்குறைய 4,85,000 தொடக்கப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

0 இவற்றில் 53 விழுக்காட்டுப்(2,57,050)பள்ளி களுக்குச் சரியான கட்டிடங்கள் இல்லை.

0 40 விழுக்காட்டுப் (1,94,000) பள்ளிகளுக்குக் கரும்பலகைகள் இல்லை.

0 33 விழுக்காட்டுப் (1,60,050 பள்ளிகளில் குழந்தைகள் உட்காருவதற்குரிய வசதிகள் இல்லை.

0 35 விழுக்காட்டுப் (1,69,750) பள்ளிகள் ஓர் ஆசிரியரைக் கொண்டு மட்டுமே இயங்கி வருகின்றன.

0 71 விழுக்காட்டுப் (3,44,350) பள்ளிகளில் நூலக வசதிகள் இல்லை.

0 41 விழுக்காட்டுப் (1,98,850) பள்ளிகளில் குடிநீர் வசதி இல்லை.

0 81 விழுக்காட்டுப் (3,15,250) பள்ளிகளில் கழிப்பிடங்கள் இல்லை.

0 தொடக்கப் பள்ளிகளில் சேரும் 10 குழந்தை களில் 3 பேர் கூட 8-ஆம் வகுப்பு வரை படிப்பதில்லை.

0 ஆனால் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல் விக்காக உரு. 905 கோடியும், நாட்டின் பாது காப்புச் செலவுக்காக உரு. 30,000 கோடியும் செலவிடப் பட்டுள்ளது.

0 மொத்தத்திட்ட ஒதுக்கீட்டில் கல்விக்காக 3·9 விழுக்காடே ஒதுக்கப் பட்டுள்ளது.

0 ஆனால் குறைந்தது 6 விழுக்காடாவது கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று 1966-ஆம் ஆண்டிலேயே கோத்தாரி ஆய்வுக் குழு அறிக்கை கொடுத்துள்ளது!

0 இதிலிருந்து ஆய்வுக் குழு அறிக்கைகளுக்கு எந்தவகையில் அரசு மதிப்புக் கொடுக்கிறது என்பது தெரியவரும்.

—நன்றி: 'தேன் மழை', மே-சூலை, '85.

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும்; கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி. ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல், முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- அமைச்சர்.

தேசிய இன விடுதலைக்குப் போராடுவோம்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண் : 61 (28-7-1985) பகுதி 25-27

திம்புப் பேச்சில் தென்பில்லை !...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடி நிலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே இராசீவின் திட்டம்.

திம்புப் பேச்சில் இலங்கையின் முடிவுக்கு, அஃதாவது பிரிவினை கூடாது என்னும் நிலைக்கு, தமிழீழ விடுதலைப் போராளிகள் ஒத்துப்போக வில்லையானால், அகேபொழுது இங்குள்ள மேற்கூறிய மாநிலங்களின் சிக்கல்களைக் காரணங் காட்டி நெருக்கடி நிலையை அவர் கட்டவிழ்த்து விடுவார். அவ்வாறு நிகழுமானால், தமிழீழப் போராளிகள் இந்தியாவில் இருப்பது தவிர்க்கப்படும்; அல்லது இலங்கை அரசிடம் அவர்கள் பிடித்துக் கொடுக்கப்படுவார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. அது தொடர்பாகத் தமிழ்நாட்டில் எழும் கிளர்ச்சிகளும் எழுச்சிகளும் (ஒருவேளை இங்குள்ள தமிழர்களுக்கும் தலைவர்களுக்கும் உண்மையிலேயே(!) மானச்சீற்றம் (ரோஷம்) வந்து, அவை நடந்தால்; அவை...) நெருக்கடி நிலையின் எஃகுப் பிடிக்குள் அடக்கி ஒடுக்கப்பட்டுவிடும் என்பது இந்திய அரசின் (அஃதாவது இராசீவ் கும்பலின்) கணிப்பு. (அண்மையில், இதுவரையில் இருந்த J. I. C. என்னும் உளவுத்துறையை அழித்து, அதனினும் ஆற்றல் வாய்ந்த N S.B (தேசியப் பாதுகாப்புக் களறி) என்னும் அனைத்து உளவுக் கிளைகளும் உள்ளடங்கிய, மிகப் புதினமான ஓர் உளவு அமைப்பை இராசீவ் ஏற்படுத்தியிருப்பதும் இதன் பொருட்டே என்று எண்ண வேண்டியுள்ளது.) இனி இன்னொன்றையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டால், அஃது 75-இல் இந்திராகாந்தி அறிவித்த நெருக்கடி நிலைபோல் இராது; அதைவிட மிகக் கொடுமையாகவும் சடுமையாகவும் இருக்கும். பெரும்பாலும் அதுதான் இவ்விந்திய நாட்டின் இப்பொழுதைய ஆட்சியின் இறுதி நெருக்கடி நிலை அறிவிப்பாக இருக்கும்.

அந்நிலை வருமானால், அனைத்துப் போராட்ட உணர்வுகளும் அடியோடு கல்லியெறியப்படும். எதிர்க் கட்சிகள் எல்லாம் ஆளுங் கட்சிக்குள் கவர்ந்து கொள்ளப் பெற்றுக் கரைத்துக் கொள்ளப்படும். சில அடங்காத எதிர்க் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் எங்கிருப்பார்கள் என்றே சொல்ல முடியாது! வீரமும், தன்மானமும், விடுதலை வேட்கையும் கொண்டவர்கள் மட்டுமே, நாட்டின் எதிரணியில் இருப்பார்கள். ஆனால் அவர்களின் தொகை மிகவும் குறைவாகவே இருக்கும். பிறகு நாடு என்னென்ன மாற்றங்களை எய்தும் என்று இப்பொழுதைக்குச் சொல்ல முடியாது.

இந் நிலையில், இங்குள்ள தமிழினத் தலை(!)வர்களும், தள(!)பதிகளும் என்ன செய்யப் போகிறார்கள்? 'மண்டல் குழு' என்று மண்டையைக் குழப்பிக் கொண்டே இருக்கப் போகிறார்களா? அல்லது மண்டல விடுதலைக்குத் தங்களை முன்னிருத்திக் கொள்ளப் போகிறார்களா? காலம் விடை சொல்லட்டும்! 0

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம்!

12-5-1985 - இல் ஈரோட்டில் கூடிய கூட்டத்தின் நிகழ்ச்சிச் சுருக்கம்! (தொடர்ச்சி-4)

இதழ் : 59-இன் தொடர்ச்சி :

அடுத்துப் பேசிய, கழக முதல்வர், முற்பகல் நிகழ்ச்சியின் முடிவுரையாகக் கீழ்வருமாறு கருத்துரையாற்றினர்.

'உ.த.மு.க. செயலியக்கமாகத் தொடங்கி மூன்றாண்டுகளுக்கு மேலாகியும், இதுவரை ஆங்காங்கு மாவட்ட அமைப்புகளையும், வட்ட அமைப்புகளையுமே உருவாக்கிக் கருத்துப் பரப்பும் பணியை மட்டுமே அது செய்து வருகிறது. போதிய பொருள் வலிவில்லாமலும், அதன் தொடர்பாக முழுநேரத் தொண்டர்கள் இல்லாமலும் இருக்கின்ற நிலையில், நாம் இயக்கத்தைக் கட்டமைப்பதே பெரிதான பணியாக இருக்கிறது. அதுவுமன்றி, இயக்க இதழான 'தமிழ்நிலம்' இதுவரை தொடர்ந்து நடத்தப் பெற்று வருவதும் இன்னொரு பெரும்பணியாக இருக்கிறது. இந்த நிலையில், நாம் பொதுமக்களிடம் நேரிடையாக இறங்கிச் செயல்களில் ஈடுபடுவதென்பது, பெரிதும் சுணங்குகிறது என்பது உண்மைதான். ஆனால் என்ன செய்வது; வலு மிகுந்த இயக்கங்களெல்லாம் கூட, இப்பொழுதைய காலகட்டத்தில் உருப்படியாக ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கையில், நாம் மட்டும் என்ன செய்துவிட முடியும்? படிப்படியாக நம்மை வலுப்படுத்திக் கொண்ட நிலையில்தான் நாம் ஏதேனும் செய்ய முடியும். எனவே நாம் ஏதும் செய்ய முடியவில்லையே என்று எவரும் மனச்சோர்வு கொள்வதோ, நம்பிக்கை யிழப்பதோ, நம்மைக் குறைத்து மதிப்பிட்டுக் கொள்வதோ தேவையில்லாதனவாகும். மேலும் நாம் எடுத்துக் கொண்ட பணி, இன்று, தமிழகத்தில் உள்ள பிற இயக்கங்கள் எடுத்துக் கொண்டுள்ள பணிகளை விட மிகப் பெரியதாகும். மிகவும் கடினமானதாகும். அரசியல் ஈடுபாட்டை மட்டுமே சில இயக்கங்கள் கொண்டிருக்கின்றன; சில குமுகாயத் திருத்தம் என்பதை மட்டுமே கருத்தாகக் கொண்டிருக்கின்றன. மொழி வளர்ச்சியைப் பற்றியோ, அதைத் தூய்மைப்படுத்தி, ஆரியத்தின் தாக்கத்திலிருந்து மீட்டு நிலைப்படுத்துவதைப் பற்றியோ எந்த இயக்கமும் சிந்திக்கவும் இல்லை; செயலுக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முன்வரவும் இல்லை. நம் இயக்கத்துக்கோ மொழி, இனம், நாடு என்னும் மூவகைப் பணியும் கடமையாக உள்ளது. எனவேதான் நாம் தொடக்கத்திலேயே, அதன் கட்டுக்கோப்பான அமைப்பு முறைக்கே அரும்பாடு பட வேண்டியுள்ளது.

மேலும் நம் இயக்கத்தில் உள்ளவர்களில் பெரும்பாலார் அரசுப் பணிகளில் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படையாக இயக்கத் தொண்டில் ஈடுபாடு கொள்வது கடினம். போதிய பணமிருந்தால் பலரை இதில் ஈடுபடுத்தலாம். ஆனால், பணத்திற்கு நாம் எங்கே போவது? இயக்கம் தொடங்கி மூன்றாண்டுகளாகியும், நாம் இன்னும் உறுப்பினர் கட்டணமோ, அமைப்பாளர் தொகையோ கூட தண்டவில்லை. மற்ற இயக்கங்களெல்லாம் அதற்கு இதற்கு என்று பொதுமக்களை ஏமாற்றி நிறைய பணம் தண்டுகையில், நாம் பணம் என்று அவர்களிடம் போவது, மேலும் அவர்களைக் கொடுமைப்படுத்துவதாகும். எனவே, நாம் வலுப்பெறும் வரையில் பொறுமையாகவும், அதேபொழுது கடமையுணர்வோடும் இருந்தாக வேண்டும். இவை இருக்கட்டும்.

இந்தியா விடுதலை பெறும் பொழுது வெள்ளைக்காரர்கள், இங்கிருந்த வடநாட்டு ஆரியர்களிடமே இந்நாட்டு உரிமையைக் கொடுத்துச் சென்றார்கள் என்பதை அறிவோம். இதுபற்றி ஓர் உண்மையை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

'Indias Past' (Oxford-1927- Preface Page VI, VII) என்னும் ஒரு வரலாற்று நூலில் அதன் ஆசிரியர் A. A. Macdonell என்பவர் கீழ்வருமாறு எழுதுகிறார். இந்தச் செய்தி நம் பேரா. மு. தெய்வநாயகம் வெளியிட்டு வரும் 'திராவிட சமயம்' என்னும் இதழில் வெளிவந்துள்ளது. அதை இங்கு உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன்.

'—கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஆரிய இனத்தின் மற்றொரு பிரிவினரான ஆங்கிலேயர்கள் இங்கு வந்து, இங்கேயிருந்த ஆரியர்களுடன் இழந்துபோன தங்களின் மூவாயிரம் ஆண்டுக்காலத் தொடர்பினைப் புதுப்பித்துக் கொண்டு, இங்கேயிருந்த ஆரியர்களால்தாம் இந்தியாவில் அறிவு வளர்ச்சி ஏற்பட்டது என்று எழுதிவைத்துள்ளார்கள்.

'அத்துடன் இவ்விரு பிரிவினரும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களாயிருந்தவர்களாயிருந்ததினால், இவ்விருவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாய் நின்று, நாடுபிடிக்க, இங்கேயிருந்த பிராமணர்கள் ஆங்கிலேயர்க்குதவ, இவர்களின் வாழ்க்கை வசதிகளுக்காக, ஆங்கிலேயர்கள் இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, இவ்வாறாக இரு பிரிவினரும் ஒருவர்க்கொருவர் துணை நின்று, இந் நாட்டை அடிமைப் படுத்தினர்.

'ஆங்கிலேயர்களை இந் நாட்டை விட்டு வெளியேற்றியபோது, அவர்கள் தமக்குரிய ஆளுமை உரிமையை இங்கேயிருந்த ஆரியர்களிடமே ஒப்படைத்துச் சென்றனர்'.

.... 'The modern European become aquinted with the Indo - Aryan. These two Civilizations, starting from a Common scurce have after a seperation of atleast 3000 years again become united during the last four Centuries, reprsenting together a quarter of the total of the earths inhabitants. During these four Centuries (1498 1926)-the new comers from the west have gained acquaintance with and recoverd the history of India's Past mental development. All this will contribute something to clearer mutual understanding by two civilizations which in their origin one and the same'

இதனை எதற்காக இங்கு எடுத்துக் காட்டுகிறேன் என்று சொன்னால், அவ்வாரியர்களிடம் கிடைத்துவிட்ட நாட்டினின்று நம் நாட்டைப் பிரித்தெடுத்து, நமக்குண்டான உரிமைகளை மீட்டெடுப்பது மிகவும் கடினமான பணியாகும். அப்பணியை எல்லாருமே கைவிட்டு விட்ட நிலையில் நாம் அதனைச் செய்ய முன் வந்திருக்கிறோம்.

ஆனால், இங்கிருக்கின்ற தமிழர்களோ, பலவகையிலும் ஒற்றுமையின்றி அரசியல் நிலையிலும் இனநிலையிலும் பொருளியல் நிலையிலும் பல்வேறு கட்சியினராகவும், மதத்தினராகவும் சாதியினராகவும், ஏழை எளியவர்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். இப்பொழுது தனி நாட்டுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழப் போராட்டக்காரர்களிடையே கூட - உரிமைக்காகப் போராடவேண்டும் என்று எண்ணுகின்றவர்களிடையில் கூட இந்த வேறுபாடுகள் உள்ளன என்றால் என்ன செய்வது? தமிழினம் என்ற அளவில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடும் பொழுதுதான், நாம் வலிவுள்ளவர்களாக இருக்கமுடியும்.

இங்கு, தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைவிட திராவிட மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களிடையில் இனவுணர்வு மிகுந்திருப்பதைக் காண முடிகிறது. திராவிடர்கள் என்ற நிலையில்தான் நாம் இப்பொழுது இருக்கின்றோம். இவ்வுணர்வு நீங்கி அனைவருக்கும் தமிழினம் என்கிற உணர்வு வளர வேண்டும். அவ்வாறான ஒன்றிய உணர்வுடன்தான் நம் உரிமைகளை நாம் மீட்டெடுக்க முடியும்.

அனைத்து நாடுகள் சட்டப்படியும், உலக ஒன்றிய நாடுகள்(U.N.O.) அமைப்புறுதிப் படியும், கூட்டுச்சேரா நாடுகளின் 1964-ஆம் ஆண்டின் அறிவிப்புப் படியும், தமிழர்கள் தனி நாடு கோருவதற்கு முற்றிலும் தகுதி படைத்தவர்கள். சட்ட அடிப்படையான தன்னுரிமைக்காகத் தன்மானமுள்ள, தமிழ்த்தேசிய உணர்வுள்ள தமிழர்கள் தனித்தமிழ்நாடு கேட்பதை இந்திய அரசு குற்றமாகக் கூற முடியாது. அவ்வாறு கூறப்படுமேயானால், அஃது இங்குள்ள அடிப்படை மக்கள் உரிமையைப் பறிக்கும் சட்டப்புறம்பான செயலாகும்.

இதுபற்றி இங்கிலாந்திலுள்ள தமிழர் முன்னேற்றக் கழகம் என்னும் அமைப்பு அங்குள்ள குயின் கவுன்சிலைச் சேர்ந்த சட்டவல்லுநர்களை விளக்கம் கேட்டதற்கு, 'ஆங்கிலேயர்கள் 1947 - ஆம் ஆண்டு இந்தியத்துணைக் கண்ட ஆட்சியுரிமையை வடநாட்டு ஆரியர்களிடம் ஒப்படைத்ததால், ஏற்கனவே அரசாண்ட தமிழினம் தங்களுக்கிருந்த நாட்டுரிமை இழந்தார்களே தவிர, தமிழர்களின் ஒப்புதலைப் பெற்று, அவர்கள் இந்திய ஒன்றியத்தில் (Indian Union) சட்டப்படி இணைக்கப்படவில்லை' என்று கருத்தறிவித்துள்ளனர்.

மேலும், கூட்டுச்சேரா நாடுகளின், இரண்டாவது மாநாடு 1964-ஆம் ஆண்டு கெய்ரோவில் நடந்தது. அப்பொழுது, அங்கு, மிகவும் முகாமையான ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. அஃது 'ஒவ்வொரு தேசிய இனத்திற்கும், தங்கள் அரசியல் உரிமையைத் தாங்களே தீர்மானித்துக்கொள்ளும் தன்னுரிமை உண்டு' என்பதாகும். இத் தீர்மானத்தை இந்திய அரசும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டுள்ளது: இந்த நிலைகளையெல்லாம் நாம் உணர்ந்து, ஒன்றுபட்டு, தமிழ் நாட்டு விடுதலை உரிமைக்காகப் போராட வேண்டும்.

இம் முயற்சி தம் ஒரியக்கத்தால் மட்டுமே செய்துவிடக் கூடியதன்று. எனவே

(தொடர்ச்சி முதல் பத்தி பார்க்க)

(மூன்றாம் பத்தியின் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஒரு கூட்டணியை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு, தனிநாட்டு உரிமைத் தேவையை விளங்கிக் கொண்ட ஐந்து இயக்கங்களும் ஒன்றிணைந்து ஒரு கூட்டணியை உருவாக்கினோம். ஆனால் கூட்டணி உருவான சில மாதங்களிலேயே அது மேற்கொண்ட வெளிப்படையான சில நடைமுறைகளைக் கண்டு இரண்டு இயக்கங்கள் இதன் அமைப்பிலிருந்து விலகிக் கொண்டன. இப்பொழுது நாங்கள் (உ.த.மு.க) எசு. என். நாகராசன் இணைந்துள்ள இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் நடுவண் சீரமைப்புக் குழு, புலவர் கலியபெருமாள் அவர்களின் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மார்க்சியம், இலெனினியம்) மூன்று இயக்கத்தவர்கள்தாம் இருக்கின்றோம். இந்த அளவினாகிலும், ஒரு கூட்டணியாக அமைந்து, இவ்வளவு பெரிய கடினமான பணியை நாம் மேற்கொள்ள வில்லையானால், பயனில்லாமல் போகும். எனவேதான் தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி என்னும் ஓர் அமைப்பின் அடிப்படையில் இவை போராட்டங்களை நடத்தியாக வேண்டியுள்ளது.

அதில் முதல் போராட்டமாக வரும் ஆகத்து 15-இல் இந்திய அரசு போட்டுள்ள பிரிவினைத் தடைச்சட்டத்தைக் கொளுத்துவது என்று தீர்மானித்துள்ளோம். அது பற்றிய திட்டத்தை உங்கள் முன் தெரிவித்து, உங்கள் இசைவைப் பெறுவதற்காகவே இச்செயற்குழு கூட்டப்பட்டது.

நாம் ஏதும் செய்யவில்லையே என்னும் குறை நம்மில் பலரிடம் இருப்பதாக நான் அறிகின்றேன். நாம் மற்றவர்களைப் போல, வெறும் ஆரவாரத்திற்காகவோ, விளம்பரத்திற்காகவோ, அல்லது மக்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து இலக்கம் இலக்கமாகப் பணந்திரட்டுவதற்காகவோ செயல்களை வெறும் பெயரளவில் செய்துவிட முடியாது. உண்மையாகவே நாம் நம் மொழிக்கும், இனவுரிமை நாட்டுரிமை மீட்பிற்கும் ஏதாவது செய்தாக வேண்டியிருக்கிறது அதற்கு முன்னறிவிப்பாகத்தான் இப்போராட்டத்தை இக் கூட்டணி முன்வைக்கத் தீர்மானித்திருக்கிறது. (தொடரும்)

தமிழீழம் விடுதலை அடைவதால், மலையகத் தமிழர்களுக்கு நன்மை இல்லை. என்ற கூற்றுச் சரியானதா?

— மலர்மாறன் —

இலங்கைத்தீவிலே வாழும் தமிழர்கள் தொன்மை (பூர்வீக)த் தமிழர்கள் என்றும், மலையகத் தமிழர்கள் என்றும் அழைக்கப்படுகின்றார்கள்.

தொன்மைத் தமிழர்களின் எண்ணிக்கை 25 இலக்கம் என்ற அளவிலே இருக்கின்றது.

காடுகளிலே, விலங்குகளோடு விலங்குகளாக சிங்களவர்கள் வாழ்ந்த்க் கொண்டிருந்த காலத்திலே கூட, நாகரிகமான ஆட்சியை அமைத்து, அரசாண்டுக் கொண்டிருந்தவர்கள் தமிழர்கள். அவர்கள் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு பகுதிகளிலே பெரும்பான்மையாக வாழ்ந்தக் கொண்டிருப்பவர்கள்.

இலங்கைத் தீவின் நடுப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் மலையகத் தமிழர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 10 இலக்கம் என்ற அளவிலே உள்ளது.

கடந்த 150 ஆண்டுகளுக்கு முன்பு தேயிலைத் தோட்டங்களிலே வேலை செய்வதற்காக ஆங்கிலேயர்களால் இந்தியாவிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இவர்கள். சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கும் பகுதிகளில் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

வேறு சிற்சில பகுதிகளில் மலையகத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருந்தனர். இலங்கை அரசு, அந்தப் பகுதிகளில் சிங்களவர்களைப் பெருமளவில் குடியேற்றி, மலையகத் தமிழர்களை அந்தப் பகுதிகளில் கூட சிறுபான்மையினராகவே ஆக்கியிருக்கின்றது.

தொன்மைத் தமிழர்கள் வேறு, மலையகத் தமிழர்கள் வேறு என்றும் மலையகத் தமிழர்களை, தொன்மைத் தமிழர்கள் மதிப்பதில்லை என்றும், மலையகத் தமிழர்கள் துன்புறுத்தப்படும்போது, தொன்மைத் தமிழர்கள் அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதில்லை என்றும், மலையகத் தமிழர்கள் இலங்கையில் வாழ்வதைக் கூட தொன்மைத் தமிழர்கள் ஆதரிப்பது இல்லை என்றும், அதனால், இந்தியத் தமிழர்கள் ஈழத் தமிழர்களை ஆதரித்துச் செயல்பட வேண்டிய தேவை இல்லையென்றும் கூறித் தவறான பரப்புதல்கள் தமிழகத்திலே செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

இந்தப் பரப்புதல்களைத் தமிழர்களின் உடன் இருந்தே கொல்லும் நோய்க் கும்பலும், தமிழகத்தை ஆட்சி செய்துவரும் மா. கோ. இராமச்சந்திரனின் ஆதரவாளர்களும் திட்டமிட்டுச் செய்து கொண்டிருந்தனர்.

பிரித்தாளும் சூழ்ச்சி முறையில் தமிழர்களைக் குழப்பி, ஒன்றுபட விடாமல் செய்து, தமிழினத்தை அழித்து விடவேண்டும் என்ற திட்டமிட்ட தீச்செயல்களின் அடிப்படையில், இவ் வகைப் பரப்புதல்கள் செய்யப்பட்டன.

இந்தச் சூழ்ச்சியான குழப்ப உரை மிகவும் தவறானது என்பதை ஈழத் தமிழ்த் தலைவர்கள் எத்தனையோ எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியுள்ளனர். மலையகத் தமிழர்களுக்கு எப்போதெல்லாம் கொடுமைகள் இழைக்கப்படுகின்றனவோ, அப்போதெல்லாம் தொன்மைத் தமிழர்கள் குரல் கொடுத்ததை எடுத்துக் காட்டியுள்ளனர்.

தங்களது பகுதிகளில் முடிந்த அளவு மலையகத் தமிழர்களைக் குடியமர்த்தி வசதி செய்து கொடுத்திருக்கின்றார்கள் தொன்மைத் தமிழர்கள். தொன்மைத் தமிழர்களின் பகுதிகள் இலங்கை அரசால் புறக்கணிக்கப்பட்டுள்ளதால், அங்கே போதுமான வேலை வாய்ப்புகள் இல்லை. அதனால், மலையகத் தமிழர்கள் அங்கே சென்று வாழ இயலாமல் இருக்கின்றார்கள்,

ஈழத் தமிழர்களைத் தொன்மைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என்று பேசி, நட்பு முரண் கற்பித்து, தமிழக மக்களைக் குழப்பிவந்த தமிழர்களின் உடனிருந்து கொல்லும் நோய்க் கும்பலும், மா. கோ. இராமச்சந்திரனின் ஆதரவாளர்களும், இப்போது ஒரு புதுவகைப் பரப்புதலில் ஈடுபட்டு உள்ளனர்.

தமிழீழம் தனியாகப் பிரிவதால் தொன்மைத் தமிழர்களுக்குத்தாம் நன்மையே தவிர, மலையகத் தமிழர்களுக்கு எவ்வகைப் பயனும் இல்லை. மாறாக, மலையகத் தமிழர்களுக்குப் பாதுகாப்பின்மை அதிகரிக்கும். ஏனெனில், தமிழீழம் விடுதலையடைந்து விட்டால் இலங்கை நாட்டிலுள்ள தமிழர்களின் எண்ணிக்கை 35 இலக்கத்தில் இருந்து, 10 இலக்கமாகக் குறைந்து விடுகின்றது. மலையகத் தமிழர்கள் மட்டுமே சிங்களவர்களுடன் வாழவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதனால், 10 இலக்கம் மலையகத் தமிழர்களையும் சிங்களவர்கள் அதிகமாகக் கொடுமைப் படுத்துவார்கள். இப்படியொரு புதிய குழப்ப முரண்பாட்டைத் தமிழக மக்களின் நடுவிலே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் கருத்தை மலையகத் தமிழர்களின் தலைவர் திரு. தொண்டைமான் அவர்களையும் சொல்லும்படி ஏற்பாடு செய்துள்ளனர்.

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், இந்தக் கருத்து சரியானதுபோல் தோன்றும். ஆனால், உண்மையில் அஃது ஒரு பொய்ம்மையான கருத்தாகும்.

இதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், அஃது எவ்வளவு தவறான கருத்து என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இன்று தொன்மைத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் இலங்கை அரசினால் ஆட்சி செய்யப் பட்டுக்கொண்டு இரக்கின்றனர்.

மலையகத் தமிழர்களை இலங்கை அரசு கொடுமைப்படுத்தினால், அதைத் தட்டிக் கேட்கும் உரிமையும், அதிகாரமும் தொன்மைத் தமிழர்களுக்கு இல்லை. வெறும் கண்டனத்தைத்தான் தெரிவிக்க முடியும். அப்படிக் கண்டனம் தெரிவிக்கும் அவர்களின் மீதே இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து, அவர்களையும் கொடுமைப்படுத்துகின்றது.

இலங்கையிலே தமிழர்களின் சிக்கல்களை ஒப்புரவு முறையில் தீர்த்துக் கொள்வதற்காக, இலங்கை அரசு ஈழத் தமிழ்த் தலைவர்களையும், சிங்களத் தலைவர்களையும் ஒன்று கூட்டி வட்டமிசை மாநாடு நடத்திக்கொண்டிருக்கும் போது, 60 மலையகத் தமிழர்களின் வீடுகள் சிங்கள வெறியர்களால் தீக்கிரையாக்கப்பட்டு, அழிவு செய்யப்பட்டு, அங்குள்ள மலையகத் தமிழர்களும் தாக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று செய்தி வந்திருக்கின்றது.

வட்டமிசை மாநாட்டிலே கலந்து கொண்டிருந்த மலையகத் தமிழர்களின் தலைவர்களும், தொன்மைத் தமிழர்களின் தலைவர்களும், அந் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசவேண்டுமென்று கேட்டுள்ளனர். அதற்கு சிங்கள அரசு இசைவு தெரிவித்துள்ளது.

பேசுவதற்கு இசைவு தெரிவித்ததோடு சரி; வேறு எவ்வகை நடவடிக்கையையும் இலங்கையரசு எடுக்கவில்லை.

தாக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டுள்ள தமிழர்களுக்கு எவ்வகைப் பாதுகாப்போ, உதவியோ கொடுக்கப்படவில்லை. மறுபடியும் அந்தத் தமிழர்கள் தாக்கப்பட மாட்டார்கள் என்ற உறுதியும் இல்லை.

இதற்குமேல் ஒன்றையும் மலையகத் தமிழர் தலைவர்களும், தொன்மைத் தமிழர் தலைவர்களும் கேட்க முடியவில்லை.

ஆனால், தமிழீழம் தனி நாடாக இருந்து, அதற்கென ஓர் அரசும், படையும் இருந்து, அத் தமிழீழ நாட்டில் படிநிகராளிகளாகத் தொன்மைத் தமிழர்களின் தலைவர்கள், இத்தகையதொரு வட்டமிசை மாநாட்டிலே கலந்துக் கொண்டிருக்கும்போது, இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருந்தால், நிலைமை எப்படி இருந்திருக்கும்?

ஈழத் தமிழ்நாட்டுப் படிநிகராளிகள் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள்?

"60 மலையகத் தமிழர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு, அழிக்கப்பட்டுள்ளன அத் தமிழ்க் குடும்பங்களைத் தாக்கிக் கொடுமைப்படுத்தி யுள்ளனர் சிங்கள வெறியர்கள். இவ்வெறிச் செயல்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட்டு, அவ் வெறியர்களின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். தாக்கப்பட்ட தமிழர்களுக்கு இலங்கை அரசு இழப்பீடு கொடுக்க வேண்டும். மலையகத் தமிழர்களின் பாதுகாப்பிற்கு இலங்கை அரசு, உறுதிமொழி அளிக்கவேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்காமல், இலங்கை அரசு மலையகத் தமிழர்களைக் கொடுமைப் படுத்துவதை இசைந்து கொண்டிருந்தால், தமிழீழ அரசு எதிர் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும்'' என்ற எச்சரிக்கையை அத் தமிழீழப் படிநிகராளிகள் இலங்கை அரசிற்குக் கொடுத்திருப்பார்கள்.

அந்த எச்சரிக்கையை இலங்கை அரசு பொருட்படுத்தாமல் இருந்தால், தமிழீழத்தில் குறைவான எண்ணிக்கையராக வாழும் சிங்களவர்கள் மீது எதிர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

இலங்கை நாட்டிலே 60 மலையகத் தமிழர்களின் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது என்றால், தமிழீழத்திலே 60 சிங்களவர்களின் வீடுகளுக்குத் தீ வைக்கப் பட்டிருக்கும்.

இலங்கை நாட்டை விட்டு, 60 தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றப் பட்டால், தமிழீழத்திலே உள்ள 60 சிங்களக் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு, அவ் வீடுகளிலே இலங்கை நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட அந்த 60 தமிழ்க் குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டிருக்கும்.

இலங்கை நாட்டிலேயுள்ள மலையகத் தமிழர்கள் 10 இலக்கம் பேரும், கொடுமைப் படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டாலும் கவலைப்படத் தேவையில்லை. ஈழத் தமிழ் நாட்டிலேயுள்ள, சிங்களவர்கள் அத்தனைப் பேர்களும் வெளியேற்றப்பட்டு, அவ் விடங்களிலே மலையகத் தமிழர்கள் குடியமர்த்தப்படுவார்கள். மலையகத் தமிழர்கள் அத்தனைப் பேரையும் குடியமர்த்துவதற்கு போதுமான இடம், தமிழீழத்திலே இல்லை எனில், தமிழீழ எல்லை ஓரங்களிலுள்ள இலங்கையின் பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அங்கே மலையகத் தமிழர்கள் குடியமர்த்தப்படுவார்கள்.

இலங்கை நாட்டிலிருந்து விரட்டப்பட்ட மலையகத் தமிழர்களைக் குடியேற்ற, இலங்கையின் பகுதிகளை எடுத்துக்கொள்வது நயன்மைக்குப் புறம்பானதாகாது.

ஆகவே, தமிழீழம் பிரிந்துவிட்டால், செயவர்த்தனவும், சிங்கள வெறிக்கும்பலும் இப்போது செய்து கொண்டிருக்கும் கொடுமைகளையும், முறையற்ற செயல்களையும் செய்து கொண்டிருக்க முடியாது.

தமிழன் ஒருவன்மீது இலங்கை நாட்டிலே அடி விழுந்தால், ஒன்பது சிங்களவர்கள் மீது தமிழீழத்திலே அடி விழும் என்பதைச் சிங்களக் காட்டு விலங்காண்டிகள் உணர்ந்துக் கொள்வார்கள். ஏனெனில், இலங்கையிலே மலையகத் தமிழர்கள் குறைத்த அளவு வாழ்வதுபோல, தமிழீழத்தில் இலக்கக் கணக்கான சிங்களவர்கள் குறைந்த அளவில் வாழ்வார்கள்.

அதன் காரணமாக, செயவர்த்தனவும் - சிங்கள வெறிக் கும்பலும் வாலைச் சுருட்டிக்கொண்டு, பெட்டிப்பாம்பாக அடங்கி விடுவார்கள்.

இலங்கை நாட்டிலுள்ள மலையகத் தமிழர்களுக்கு முழு பாதுகாப்பும், மரியாதையும் - மதிப்பும், சம உரிமையும் கிடைக்க வழி ஏற்படும்.

எனவே, மலையகத் தமிழர்களைக் கொடுமையில் இருந்து காப்பாற்றி, உரிமையுடன் வாழச் செய்வதற்கு இருக்கின்ற ஒரே வழி, தமிழீழம் விடுதலை அடைவதில்தான் இருக்கின்றது,

இதை மலையகத் தமிழர்களின் தலைவர் திரு. தொண்டைமான் எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழர்களின், "உடனிருந்தே கொல்லும் நோய்க்கும்பல்''களின், "பிரித்து வைத்துக் கெடுக்கும் சூழ்ச்சி''களை அவர் புரிந்துக்கொண்டு செயல்பட வேண்டும்,

'ஈழத் தமிழ்நாட்டின் விடுதலையில்தான், மலையகத் தமிழர்களின் முழுப் பாதுகாப்பும், விடுதலையும் அடங்கியிருக்கின்றது'' என்பதை உணர்ந்துகொண்டு திரு. தொண்டைமான் அவர்கள், தமிழீழப் பிரிவினைக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

அதன் மூலம் "தமிழீழம் பிரிவதால், மலையகத் தமிழர்களுக்கு நன்மையில்லை'' என்று கூறித் தமிழர்களைக் குழப்பிக் கொண்டிருக்கும் தவறான பரப்புதலை விரட்டி அடிக்கவேண்டும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு''.

இந்தியாவில் கொடுமை!

பட்டம் பெற்ற பெண்ணுக்குத் தெருக்கூட்டும் வேலை!

வேலையில்லாக் கொடுமையால், கேரளாவைச் சேர்ந்த கிரிசா என்னும் பெண்ணுக்குத் தெருக் கூட்டும் வேலை கிடைத்திருக்கிறது. வறுமையின் தாக்குதலைத் தாங்கமுடியாத இப் பெண், பொருளியல் பட்டம் பெற்றவள். இவர் ஒரு நெஞ்சு நோயாளியும் ஆவார். கிடைத்திருப்பதும் பகுதி நேர வேலையே!

நன்றி: 'தேன் மழை', மே-சூலை, '85

தமிழீழம் அமைய அனைவரும் பாடுபடுங்கள்!

[முன்னிதழ்த் தொடர்ச்சி] [தொடர்-5]

தமிழீழ அரசியலில் அகப்புற அழுத்தங்கள்!

— "குண" —

இந்நிலையில் மேற்சொன்ன அகப்புறக் கூறுகளை மதிப்பிடவும், கணக்கிலெடுத்துக் கொள்ளவும் வல்ல பக்குவத்தை ஓரிரு தமிழீழப் புரட்சி அமைப்புகளிடம் பார்க்க முடிகின்றது. எதிரிக்கு எதிரி நண்பனென்னும் முறையில், இந்தியாவையும் - உருசியாவையும் அவர்கள் கருதுவதைத் தவிர்க்கமுடியாது. இவர்கள் இன்றைய அரசியல் சமன்பாடுகளில் (Equations) ஏற்படத்தக்க அறிகுறிகளைக் குறிப்பறிந்து கொள்ள வேண்டும். தங்களுடைய உத்திகளைச் சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளத்தக்க பக்குவத்தையும், கொள்கைச் செறிவையும் சில விடுதலை அணியினர் பெற்றிருப்பதையும் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

அத்தகைய அறிகுறிகள் தாம் யாவை ?

1. இந்தியப் பேரரசு அமெரிக்காவைத் தன்னுடைய அகத்தில் வைத்துப் புறத்தில் இதுவரை உருசியாவை கட்டித் தழுவி வந்தது. ஆனால், இராசீவ் காந்தியுடைய புதிய அரசோ, அமெரிக்காவின் மீது மிகையாகச் சார்கின்ற நிலை வரலாம்.
2. புத்த சமய நலன்களைத் தழுவிய, சிங்கள இனவெறிக்கு ஆட்பட்ட ஒரு படைப்புரட்சி நடந்து, செயவர்த்தனா தூக்கி எறியப்படலாம். அதைத்தழுவி சோவியத்து-இந்திய சார்பு திருவாட்டி, பண்டாரநாயகாவின் ஆட்சி வரலாம். அப்போது இந்தியா, உருசியா ஆகியன இலங்கையைப் பற்றிக் கொண்டுள்ள நிலை மாறலாம்.
3. இந்தியா இலங்கையின் மீது படையெடுத்து அமிர்தலிங்கத்தை அரசுக் கட்டிலில் ஏற்றி வைத்து அவரைக் கொண்டு தமிழீழ விடுதலைப் போராளிகளை வேட்டையாடத் தொடங்கலாம்; அல்லது தமிழீழத்தைத் தன்னுடைய மாநிலங்களில் ஒன்றாகச் செய்து கொள்ளலாம்.
4. இந்தியா இலங்கையின் மீது படையெடுத்து திருவாட்டி பண்டாரநாயகாவை ஆட்சியில் அமர்த்தி, இலங்கையென்னும் ஒற்றையரசுக்குள் தமிழர்களுக்கு ஒருவகைத் தனனாட்சி வழங்குவதெனனும் அரசியல் தீர்வை ஏற்படுத்தித் தரலாம்.

இத்தகைய மாறுபட்ட சூழ்நிலைக்கு ஏற்ப தங்களின் உத்திகளை மாற்றிக்கொள்ள வல்லமையாகத் தமிழீழ விடுதலை அணிகள் சில ஆயத்தமாக இருக்கலாம். ஆனால், சூழ்நிலைமைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப தங்களின் பகைவர்-நண்பர் சமன்பாட்டை எவ்வாறு அவை மாற்றி அமைத்துக் கொள்ளப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

உருசியாவை அணுகியபோது, இந்தியாவின் ஊடேதான் தமிழீழச்சிக்கல்களைத் தான் பார்க்கமுடியுமென அந்த வல்லரசு சொல்லி விட்டதாம். ஆனால், தலையாய இரு தமிழீழ அமைப்புகளைத் தவிர பிற யாவும் உருசியாவிடம் அளவுக்கு மீறிப் பற்றுக் காட்டத் தொடங்கியுள்ளன. இந்தியாவைச் சார்ந்தே விடுதலை பெற்றுவிடலாமென நம்பி, ஒரு புறக் காரணக் கொள்கையை அழுத்தமாகக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளன. அமெரிக்கா, உருசியா எனனும் இரு பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான முரண்பாட்டை பயன்படுத்திக் கொள்ளாமல் போவது அறிவுடைமையாகாது என்பது உண்மை. வியத்நாமின் வியட்மின் படைகளை உலகப்போர்ச் சூழலில் ஒச்சிமின் அமைத்தபோது, அமெரிக்காவிடமிருந்தே துமுக்கியைப் பெற்று, அவ் விடுதலைப் படையைக் கூட்டினர். அதற்குப் பின்னர் அந்த அமெரிக்காவிற்கே எதிராகத் திருப்பினர். அதேபோன்று, சப்பானை எதிர்த்துப் போரிட, பிரிட்டிசாரிடமிருந்தே துமுக்கியைப் பெற்றுப் பின்னர் அந்தப் பிரிட்டிசு அரசையே எதிர்த்து, அந்தத் துமுக்கியைத் திருப்பிய மலையப்பொதுவுடைமைக் கட்சித்தலைவர் செங்பென்னையும் நாம் நினைவுக் கூறுகிறோம். இந்த வழியில், அமெரிக்கச் சார்புப் பிடியிலிருந்து விடுபட்டு, ஒப்புரவு நாடென கருதப்படுகின்ற உருசியாவிடம் தமிழீழம் அடிமைப்படுவது சரியன்று. "ஒப்புரவு அடிமை" (சோசலிசக் குடியிருப்பு) நாடுகளாகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வரிசையில்தான் அது தமிழீழத்தைக் கொண்டுபோய் நிறுத்தும். அதனால், அகலாது-அணுகாது தீக் காய்வதைப்போல், இந்திய சோவியத்து ஆதரவைத் தமிழீழப் புரட்சி பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென இவ்வுணர்வும் வல்லரசு எதிர்ப்புணர்வும் கொண்ட பிற நாட்டுத் தமிழர்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை.

தமிழீழ விடுதலைப் புரட்சியின் இரு பேரூற்றுகளாகிய இரு அமைப்புகளில் ஒன்று, பரந்த அளவில் மக்கள் அமைப்புகளைக் கட்டி, ஊர்தோறும் புரட்சி அமைப்புகளை மாற்று அரசிற்கான கூறுகளாக அமைத்து, இணைந்து சிங்கள முற்போக்கரிடம் புரட்சி உறவுகளை வளர்த்துக்கொண்டு, கரந்தடிப்(கொரில்லா) போர்க் குழுக்களை ஒரு மக்கள் படைக்கான கருக் குழுவாக உயர்த்தி இருக்கலாம். ஆயினும், தாக்குதலே இப்போதைக்கு இல்லை என்னும் நிலையை அவர்கள் எடுப்பார்களேயானால் அது முற்றுமைத் தற்காப்பு (Absolute defence) என்னும் நிலையைக் குறிப்பதாகச் சிலர் கருதலாம். போர்த் தந்திரத் தற்காப்பு (Strategic defensive) என்னும் நிலையில் இருக்கும் போதே உத்தித் தாக்குதல்களைத் (Tactical offensives) தொடுக்காமல் முறைப் படைகளையும் தளப்பகுதியை அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்வதைப் புறக்கணிக்கின்ற நிலைக்கு இது கொண்டு போகுமோவென சிலர் அஞ்சலாம்; அல்லது குறை கூறலாம்.

மற்றோர் அமைப்பு வெறும் படையியல் தீர்வைக் கொள்கையாகக் கொண்டு இருக்கலாம். ஆயினும் இதனுடைய கொள்கை நிலையிலும் நம்பிக்கை தருகின்ற போக்குகளையும் வளர்ச்சியையும் பார்க்கத்தான் முடிகின்றது. யூதவெறி (சியோனிடம்) நடத்துகின்ற படை வழியில் சொல்வதைப் போன்ற சிங்கள இனவெறிப் படைத் தாக்குதலிலிருந்து தாம் பதுங்கித் தாக்குதல் நடத்திய ஒரு பகுதி மக்களைப் பாதுகாக்க முடியாத நிலையில், அதிரடித் தாக்குதல்களைத் தொடுப்பது பெரிய உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது என்னும் திறனாய்வை இவர்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளத்தான வேண்டும், இத்தகைய தாக்குதல்களால் மக்களுக்கு ஏற்படுகின்ற உயிரிழப்புகள் இந்தியாவின் படையியல் தலையீட்டை வேகப்படுத்துகின்ற ஏதத்தை நோக்கியதாக இருப்பதென்பதும் உண்மை.

ஆயினும், இவ்விரண்டு அமைப்புகளுக்குஇடையிலான கொள்கை வழி முரண்பாடுகள் சில நல்ல விளைவுகளையும், சில தீய விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. இவ்விரண்டு அணிகளும் ஒரு தலையான இரு நிலைகளை எடுத்துப் பூசலிட்டு வருகின்றனவோ என அஞ்சவேண்டி இருக்கின்றது. இவ் வணிகள் ஒன்றுக்கொன்று கலக்கின்ற திறனாய்வுகள், நேரிய கருத்துப் போராட்டமாக இருப்பினும், அக் கருத்துப் போராட்டத்திற்கு ஓர் இணக்கமான தீர்வு காணப்படவேண்டும். ஒன்றிலிருந்து மற்றொன்றெனப் பிரிக்க முடியாத அழைப்பு வழியிலான அவ்விரு பகுதி உண்மைகளையும் இணைத்து ஓர் ஒன்றுபட்ட போர்த் தந்திரத்தையும், உத்திகளையும் வகுத்துக் கொள்வது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப(து) இழுக்கு"

என்னும் விளக்கத்துடன் இவ் விரண்டு பேரமைப்புகளும் விரைவில் இப் பூசலுக்கு முடிவு காண்பது தமிழீழப் புரட்சிக்கும், தமிழீழ மக்களுக்கும் நல்லது.

இவ்விரண்டு அமைப்புகளுக்கும் அப்பாற்பட்ட பிற யாவும் புறத் தீர்வு என்னும புறக் காரணத்தை நம்பி இந்திய சோவியத்து ஆதரவுகளைத் தேடி அலைவதைப் பார்க்கின்றோம். தமிழீழ மக்களின் தனி நாட்டுரிமையை எதிர்த்துச் சிங்களத் தொழிலாளரும் தமிழ்த் தொழிலாளர்களும் வகுப்புக் கோட்பாட்டைத் தழுவி ஒப்போலை (ஓட்டு)க்காகப் புரட்சி செய்ய வேண்டுமெனச் சொல்லி வந்தவர்களில் சிலர் தமிழீழத் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்பட்டனர். பின்னர் தாங்கள்தாம் உண்மையான விடுதலைப் புரட்சியாளரெனச் சொல்லி, அணி கட்டிக்கொண்ட பழைய இடதுசாரிகள் இவர்களில் ஒருபக்கம். தமிழ்த் தேசிய உணர்ச்சியை மட்டுமே நம்பி துமுக்கி எடுத்துச் செயல்பட்டு வருகின்ற அமைப்புகள் அவர்களுடன் கைக்கோத்து நிற்கின்றன. இந்தப் பக்கத்தினர் இந்திய சோவியத்து அரசுகளையே முகம் நோக்கியவாறு கொழுகொம்பு இன்றி வளர முடியாத சிறு கொடிகளாக இருப்பதும் உண்மை.

இந் நிலையில், தமிழகத்துத் தமிழ் மக்கள் தமிழீழ மக்களுக்குச் செய்யவேண்டிய கடன் யாது? இந்தியா இலங்கையின் மீது படையெடுத்துத் தமிழீழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைப்பது அல்லது தமிழீழத்தை உருவாக்கித் தருவது என்னும் போலி உணர்ச்சியையும் கொள்கைப் பரப்பலையும் எதிர்ப்பதே அவர்கள் தமிழீழ மக்களுக்கு ஆற்றவல்ல மிகப் பெரும் கடனாக இருக்கும். மாறாக, தமிழீழத்தைத் தனியரசாக ஏற்றுக்கொண்டு, அரசியல் ஒப்புதல் தரச்சொல்லி இந்திய அரசை வலியுறுத்துவதே அக் கடனின் மறு பக்கமாகும்.

ஏதோ ஒரு சூழ்நிலையில், தமிழகத்தில் இருக்கின்ற தமிழீழப் புரட்சியினரை இந்திய அரசு காட்டிக் கொடுக்கவோ, அச்சுறுத்தவோ பிடித்துக் கொடுக்கவோ செய்வதைத் தடுக்கவல்ல வலுவான பொதுக் கருத்தைத் தமிழகத்தில் உருவாக்குவதே அவர்களுடைய கடனாகும். இதுவே தமிழீழம் ஆட்பட்டுள்ள அகப்புற அழுத்தங்களை நீக்கித் தமிழீழப் புரட்சியர்கள் வெற்றி கொள்ள உதவவல்ல நல்லதொரு துணை வலிமையாக இருக்கும்.

வாழ்க தமிழீழம்! வெல்க தமிழீழ மக்கள் குடியாட்சிப் புரட்சி!! (முற்றும்)

அயலகத் தமிழர் ஒருவரின் ஆர்வமிக்க மடல்:

இந்தோனேசியாவில் முதன் முதல் குடியேறியவர்கள் தமிழர்களே !

தமிழ்நாடும் தமிழீழமும் உடனே அமைந்தாக வேண்டும்!

தமிழ் நிலம் வெளியிடும் அனைவருக்கும், சுப சிதம்பரம் வணக்கம். உங்கள் கொள்கைகளும், என் கொள்கைகளும் ஒத்தவையாக இருப்பது கண்டுமகிழ்கிறேன். ஆனால் செய்தக்க அல்ல செயக் கெடும், செய்தக்க செய்யாமையாலும் கெடும் உறுபணிகளில் உடனே இறங்க உங்களை வேண்டுகிறேன். இந்தோனேசியத் தீவுகளில் முதலில் குடியேறியவன் தமிழன், அடுத்து, சீனன் இவ்விரு இனக் கலப்பே இந்தோனேசிய இனமும், மலேசிய-சிங்கை மலாய் இனமும். எனவே, இந்தோனேசியாவிடம் ஒரு தீவாவது தமிழன் கேட்டோ. விலைக்கோ பெறவேண்டும். இந்தி எதிர்ப்பு உணர்வு இந்தியாவெங்கும் கொந்தளித்து எழும் வகையில் அனைத்து மாநிலத்தவருக்கும் ஆங்கில அறிக்கைகள் அனுப்பப்படவேண்டும். பின் உள்ளது போன்ற அல்லது இன்னும் விரிவான அறிக்கைகள் ஐரோப்பிய - அமெரிக்கத் தமிழர்களுக்கு அனுப்பப்படவேண்டும்; ஒன்றிய (ஐக்கிய) நாடுகள் நிறுவனம் அணுகப்படவேண்டும். அனைத்து உலக நாட்டுத் தலைவர்களின் உதவி நாடப்படவேண்டும் இப் பணிகள் அனைத்தையும் கவனித்து நிறைவேற்ற உரமான தலைமைக் குழு ஒன்று இலண்டனில் உடனே அமைக்கப் படவேண்டும். நம்மை இந்நிலைக்கு ஆளாக்கிய பிரிட்டிசாருக்குத் தொல்லை கொடுத்து விடுதலை பெறவேண்டும், அல்லது வேறு நாடுகள் தமிழர்களுக்கெனப் பெறப்பட வேண்டும். அங்குள்ள பெருந் தலைவர்கள் விடையே தருவதில்லை. அவர்கள் பெருந் தலைவர்கள். நீங்கள் விடை தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். தமிழ்க்குக் கோடிச் செல்வர்கள் விழித்து உதவவேண்டும். ஒன்றும் முடியவில்லையென்றால், 10 கப்பலை அனைத்துலகக் கடலிலே நிறுத்தி, துணிவான தமிழர்களை மட்டும் குடியேற்றி அதைத் 'தனித் தமிழ்நாடு' என்று அறிவித்திட வேண்டும். ஈழம் ஈழம் என்றுமட்டு கத்தாதீர்கள் நமக்குப் பல சொந்த நாடுகள் தேவை! சிங்களப் பயல்களோடு பேச்சு நடத்தி எதுவும் ஆகும் என்று கனவு காணாதீர்கள்.

— சு. ப. சிதம்பரம், மலேசியா.

We the more than 90 million world Thamizhs (Tamils) are much worried about Thamizh Naadu and Ilangai which belong to Thamizhs and Thamizhs alone. since many many generations, These should be freed from other's domination immediately to avoid further losses. Just like the sinhalese the Delhi wallahs are planning to enslave others by various tactics.

India is a sub-continent of various countries with various languages etc. Hindi is just another language among those. To tighten their grip these Delhi-wallahs are planning to cut off the heads of (the capitals of) these various Indian countries. They have no right to interfere in these separate countries. We call upon the whole world and the united Nations Organisation to help. Thamizh Naadu & Ilangai(Ceylon). to be come independent from these selfish people immediately. So that we can do the needful to regain all that we have lost in the past owing to the domination of others. Help live, let live and live

உ.த.மு.க. மணப்பாறை வட்டக் கிளைத் தொடக்க விழா!

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டக் கிளைத் தொடக்க விழா, கடந்த தி.பி. 2016, ஆடவை 23 (7—7—1985) ஞாயிறன்று இரவு 7 மணியளவில், மணப்பாறை பேருந்து நிலையம் அருகில், தந்தை பெரியார் சிலை முன்புறமுள்ள திடலில், பலரும் பாராட்டும் வகையிலும், பயன் தரத்தக்க வகையிலும் சீருற நடைபெற்றது.

திருச்சி, காவூர், கிருட்டிணராயபுரம், தோகைமலை, வையம்பட்டி, நடுப்பட்டி, குளித்தலை, துவரங்குறிச்சி, புத்தாநத்தம், செவல்பட்டி, கரடிப்பட்டி, பாலக்குறிச்சி கோயில்பட்டி, விராலிமலை முதலிய அண்டை அயலூர்களிலிருந்தும், தென்மொழி அன்பர்களும், உ.த.மு.க. ஆதரவாளர்களும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

மணவை நகரின் அனைத்து அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், தியாகேசர் ஆலைத் தொழிலாளர்களும், வணிகர்களும், வேளாண் பெருங்குடி மக்களும், பல்வேறு வகை அலுவலகப் பணியாளர்களும், புலவர்களும், பாவலர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், தாய்மார்களும, குழந்தைகளும் அன்பும், ஆர்வமும் கலந்திட வருகை தந்து சிப்புறச் செய்தனர்.

நெடுநாளைய தென்மொழி அன்பரும், 'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு', 'தமிழ்நிலம்' விற்பனையாளரும், பாவலருமான புலவர். திரு. நாவை. சிவம் அவர்களும், தென்மொழி இயக்க வினையாளர்களான திருவாளனமார், க. கண்ணன் அவர்களும், பழ. தமிழாளன் அவர்களும், தென்மொழிப் பணியில் ஈடுபாடு கொண்ட பாவலர். திரு. தாழை. ந. இளவழகன், பாவலர். திரு. மு. தமிழ்நெறியன், தென்மொழி ஆர்வலர்கள், ஆசிரியர்கள், திரு. ஆலை. ம. கோபாலன், திரு. சாமி சியார்ச்சு, திரு. வி. குணசீலன் ஆகியோரும், தென்மொழித் தம்பியர் திரு. அ. செல்வேந்திரன், திரு. கரு. இராசகோபாலன், திரு. கோ. நல்லதம்பி, திரு கோ. திருநாவுக்கரசு ஆகியோரும் விழா சிறப்புற அமைய பல்வகையிலும், இரவுபகலாக அரும்பாடு பட்டார்கள்.

நகரெங்கும் உள்ளூர், வெளியூர் பேருந்துகளிலும் இரு வண்ணச் சுவரொட்டிகள் எடுப்பாக ஒட்டப்பெற்றும், தட்டிகள் வைக்கப்பெற்றும், திரையரங்குகளில் விழாச்செய்தி (சிலடு) காட்டுவித்தும், மகிழுந்து வழி ஒலிபெருக்கியால் விழாச்செய்தி தெரிவித்தும், உ. த. மு. க.-வின் உயர்ந்த கொள்கைகள் தாங்கிய விழாவின் நெடிய அழைப்பிதழ்களும், "உ. த. மு. க. உண்மைக் கழகம்" எனும் பாவலரேறு அவர்களின் பாடலுடன் கூடிய துண்டு வெளியீடுகளும் ஏராளமாக வழங்கப்பெற்றும், அனுப்பப்பெற்றும் விரிவாக விளம்பரங்கள் செய்யப்பெற்றன.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தங்கிய வழிப்போக்கர் (பயணியர்) விடுதியின் நுழைவு வாயிலிலும், விழா மேடையின் பிற்பகுதியிலும், 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'ப் பதாகைகள் மிக எடுப்பாகத் தொங்கவிடப் பெற்றிருந்தன. மேடையின் முன்னிரு பக்கங்களின் மேல் உ. த. மு. க.-வின் செம்மையும் - வெண்மையும் கலந்த கொடிகள் ஓங்கி உயர்ந்து, "தமிழின மேம்பாட்டு உணர்வு நல உரைப்பொழிவு கேட்க வாரீர்" எனக் கூவி அழைப்பதுபோல், அசைந்து-அசைந்து பறந்து கொண்டிருந்தன. சாலை ஓரங்களின் இருமருங்கும் உ. த. மு. க. கொடிகள், தோரணங்கள் போல் எழிலாகக் கட்டப்பெற்றிருந்தன.

பாவலரேறு அவர்களின் மொழி-இன எழுச்சிப் பாடல்களை, விழா அமைப்பாளர்கள் தம் குரலில் பாடிப் பதிவுசெய்து, காலை முதல் மாலை ஈறுக ஒலி பரப்பிக் கொண்டிருந்தனர். உறைத்த தென்மொழி மறவரும், திருச்சி மாவட்ட உ. த. மு. க. பொருளருமான குழந்தை-ஈகவரசன் அவர்கள் முன்னதாகவே வருகை தந்து, பாவலரேறுவின் இசைப் பாடல்களைச் சலங்கைப் பறையொலியுடன் ஏற்ற பண்ணமைத்து இனிய குரலில் பாடித் தமிழின்ப உணர்வு வெள்ளத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

அதனுடன் மேடை ஒப்பனைப் பொறுப்பைத் திருவாளர்கள். ச. ஆரோக்கியசாமி, கோ. நல்லதம்பி, கோ. திருநாவுக்கரசு முதலியோர் துணையுடன், திரு. கரு. இராசகோபாலன் சிறப்புடன் செய்து முடித்தார்கள்.

சுவைஞர்கள் அமரும் நீள் பலகைகளைத் திருவாளன்மார்கள் சாமி. சியார்ச்சு, வி. குணசீலன், க. கண்ணன், பழ. தமிழாளன் முதலியோர் நிரல்பட அமைத்தார்கள். மேடை ஒழுங்கு முன்னிருக்கைகள் அமைப்பு முதலியவற்றைத் திருச்சி மாவட்டச்செயலர் திரு. நாரா. மகிழ்நன் அவர்கள் மிக நுட்பமாக உற்றுநோக்கி, ஏற்றது செய்யச் செயலருக்கு ஆணையிட்டுக்கொண்டும், விழாவின் நிகழ்வைச் செப்பமாகப் படம் எடுத்துக்கொண்டும் இருந்தார்கள் செய்தி, சுருக்கெழுத்தாளர்கள் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர்.

விழாவிற்கு மணவை வட்ட உ.த.மு.க. தலைவர் திரு. க. கண்ணன் அறி.இ., தலைமையேற்றார்கள். பாவலரேறு வாழ்த்து மழையில் நனைந்த சிவ. தமிழ்க்கதிரவன் சிவ. தமிழ்மலர் எனும் செந்தமிழ்ச் சிட்டுகள் தமிழன்னை வாழ்த்துப்பாடினர். மணவை வட்ட உ. த. மு. க. செயலரும், விழாக்குழு அமைப்பாளருமான புலவர், திரு. நாவை. சிவம், க.மு., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த பல்திறப் பைந்தமிழ் நெஞ்சங்களையும், அன்பும்-ஆர்வமும்-நன்றியுணர்வும் மீதூற வணங்கியும், வாழ்த்தியும் வரவேற்புரையாற்றினார்கள். ஆசிரியர் திரு. ம. கோபாலன் அவர்கள், பாவலரேறு பற்றிய புலவர். நாவை. சிவம் பாடலை இனிய இசையுடன் பாடினார்கள். மணவை நகர தி.மு.க. செயலர் திரு. ம! கோபாலகிருட்டிணன் அவர்கள் மேடை ஏறிப் பாவலரேறு அவர்களிடம் தம் வாழ்த்துகளையும் ஆதரவையும் கூறிவிட்டு விடைபெற்றார்கள்.

விழாவை வாழ்த்தி. திருவாளன்மார்கள் தோழர் ப. தட்சிணாமூர்த்தி (பொதுவுடைமை) வழக்குரைஞர் துரை அழகிரி (தி.மு.க) அ. இனியன் (தி.க) ப. துரைச்சாமி (அ.இ.அ.தி.மு.க), பாவலர் துரை (கணியர்) கரு. இராசகோபாலன் (மாணவர்) வி. குணசீலன் (ஆசிரியர்) கு. கோவிந்தராசன் (ஊரக வளர்ச்சித்துறை) பாவலர் மு. தமிழ்நெறியன் (நில அளவையர்), பாவலர் தாழை இளவழகன் (மண்டிக் கடை வாணிகம்) புலவர் சி. சோதிவேலன் (தமிழாசிரியர்) முதலியோர் மிகக் குறைந்த நேரத்தில் நிறைந்த நெஞ்சுடன் பேசினார்கள்.

கருவூர் வட்ட உ.த.மு.க செயலர் திரு பாவலர் கடலூர் மணிமாறன் அவர்கள் தமிழ்நில விடியலுக்கான எழுச்சியுரை ஆற்றினார்கள். உ. த. மு. க. துணைப்பொதுச் செயலர் திரு தென்னவனகோ அவர்கள் உ.த.மு.க வின் ஏழு கொள்கைக்கட்கான விளக்கங்களைத் துடிப்பும் எழுச்சியும் கலந்த தூய தமிழ்க் குரலில் பேசி உணர்வுச் சூடேற்றினார்கள். உ.த.மு.க.வின் கொள்கை முரசமான 'தமிழ்நிலம்' வளர்ச்சிக்காக மணவை வட்டச்சார்பிலும், நகரச் சார்பிலும், துவரங்குறிச்சிப் பகுதிச் சார்பிலும் ஐயாவிடம் நன்கொடைத் தொகை வழங்கி ஐயாவின்தொண்டு மேலும் சிறக்கத்துண்டும் போர்த்தப் பெற்றது.

அதன்பின்னர் உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் மணவை வட்ட நகர மக்களின் ஆர்வம் போற்றித் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நிலம், கலை, அரசியல், பண்பாடு அடிமையுற்றுக் கிடக்கும் நிலையினை விளக்கி, அதனை மீட்டெடுக்க உ.த.மு.க.வின் கொள்கைகளையும், பணிகளையும் விரிவாகவும், முறையாகவும் உரைத்துத் தமிழின விழிப்பு, ஒற்றுமை வேண்டி, உணர்வும் அறிவும் சான்ற அரியதோர் எழுச்சியுரையாக 2-30 மணிநேரம் ஆற்றினார்கள். மணவை வட்ட உ.த.மு.க பொருளர் திரு பழ. தமிழாளன் அவர்கள் விழாவிற்கு வருகை தந்தோர்க்கும், வாழ்த்தியவர்கட்கும், விழாச்சிறப்புக்குப் பல்வகையிலும் உதவிய பல்துறையினருக்கும் நன்றியுரைத்தார்கள்.

தமிழின ஒருங்கிணைப்புப் பாடலைக் குழந்தை-ஈகவரசனும், புலவர். நாவை. சிவமும் பாடினர். இறுதியாக வெளியூர் அன்பர்கட்கும், அமைப்பாளர்கட்கும் சிற்றுண்டி விருந்து வழங்கப்பெற்றது. நள்ளிரவு 12-15 மணி வரை அமைதியாகக் கேட்ட பொதுமக்கள் ஐயாவின் உரைப்பொழிவு, மணவைப் பகுதி மக்கட்குப் புதுமையும், விழிப்பும், உணர்வும் அளித்ததென்றும் அடுத்தடுத்து இதுபோன்ற கூட்டங்கள் நிகழ்த்த வேண்டுமென்றும் நிகழ்ச்சி அமைப்பாளரிடம் கூறினார்கள்.

செய்தி: நாவை சிவம், செயலர்,
உ.த.மு.க. மணப்பாறை.

த.ம.வி.க. போராளிகளுக்கு மூலனூரில், இரண்டாம் முறை பொருளளிப்பு!

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சார்ந்த, செல்வன்: சிவம், சிவபாலன் ஆகிய இரு போராளிகளும், இரண்டாவது முறையாக வந்து, பல சிற்றூர்கள், உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளின் ஆசிரிய நடுவங்கள் ஆகியனவற்றிற்குச் சென்று, தங்கள் நாட்டு மக்களின் தாங்கொணாக் கொடுமை மிகு கண்ணீர்க் கதைகளையும் தங்கள் கருவியேந்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட சூழலையும், தாங்கள் இளமையிலே பெறவேண்டிய கல்வி, தாய்-தந்தை, உடன் பிறப்புகளோடு மகிழ்ந்து வாழவேண்டிய பாச உணர்வுகள், இன்ப வாழ்வுகள் ஆகியனவற்றையெல்லாம் ஈகம் செய்துவிட்டுத் தங்கள் நாட்டின் அடிமைத் தளை முறித்துப், பறிபோன உரிமையை வென்றெடுப்பதற்காகக் கருவி யேந்திய போராட்டத்தில் ஈடுபட்டுத் தாங்கள் அடைந்த, அடைந்து வருகின்ற இன்னல்களை யெல்லாம் எடுத்துக்கூறி, இனி மேல் தாங்கள் செய்யவேண்டிய இறுதிப் பணி என்ன என்பதையும், வீரவுணர்வோடும், சூளுரையோடும் கூறினார்கள்.

அவ்வுணர்வு உரைகளைக் கேட்ட எளிய மக்களும்கூட, உளம் உருகிக் கண்ணீர் சிந்தும் நிலைக்குள்ளாயினர், அதன் பயன்? மூலனூர் வட்டாரம், மிகவும் பிற்பட்ட வறண்ட பகுதி. அதனால் மக்களும் பொருளியல் துறையில் வறுமை நிலையிலேயே பெரும்பாலோர் வாழ்கின்றனர். இருந்தும்கூட, தங்களால் இயன்ற பொருளுதவியை மனமுவந்து நல்கினர். இன உயர்நிலைப்பள்ளி மாணாக்க-மாணாக்கியர்களும், இன உணர்வுடனும், எழுச்சியுடனும் துணை நின்றது போற்றத்தக்கது.

பொருள் வழங்கியோர் விளக்கம்:

1.	அரசுயர் பள்ளி சேசையன் பாளையம் பள்ளி, ஆசிரியர்கள், மாணாக்க-மாணாக்கியர்கள்.	உரு. 650-00
2.	சேசையன்பாளையம், கதர்க்கடை ஊழியர்கள்.	,, 206-00
3.	அரசுயர் பள்ளி. வடுகப்பட்டி, ஆசிரியர்கள், மாணாக்க-மாணாக்கியர்கள்	,, 50-00
	வடுகப்பட்டி, மின்சார வார ஊழியர்கள்.	,, 25-00
4.	மூலனூர் தொடக்கப்பள்ளி, ஆசிரியர்கள் நடுவம்.	,, 362-00
5.	கன்னிவாடி, தொடக்கப்பள்ளி, ஆசிரியர்கள் நடுவம்.	,, 170-00
6.	கன்னிவாடி, மேனார் பேரூராட்சித் தலைவர், சிறு வணிகர்கள் வழங்கியது	155-00
7.	மொங்க நல்லாம்பாளையம்; பொதுமக்கள் வழங்கியது.	,, 595-00
8.	கணேசம் புதூர், பொதுமக்கள் (மிகச்சிறிய ஊர்)	,, 180-00
9.	அரிசினம்பாளையம், பொதுமக்கள்.	,, 545-00
	மொத்தம்	உரு. 3,398-00

இந்த 3,398 உருபாக்களும், பெரும்பாலும் எளிய மக்களாலும், ஒரு சில நடுத்தர மக்களாலும், ஆசிரியப் பெருமக்களாலும் வழங்கப்பட்டவை. இத்தொகைத் தண்டலுக்கு உதவிபுரிந்த தலைமையாசிரியர்கள், சர்வோதய சங்க மேலாளர், ஆசிரிய நடுவங்களின் பொறுப்பாளர்கள் ஆகியோர்கள் பாராட்டிற்குரியவர்களாவர். பல சிறு வணிகர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். அவர்களும் பாராட்டிற்கு உரியவர்களாவார்கள்.

தம்மை நாடி வந்தவுடன் சிறு தொகையானாலும் மனநிறைவுடன் நல்கிய மேனாள் கன்னிவாடிப் பேரூராட்சித் தலைவர், உதவியை நாடியவுடன் ஆர்வமுடன் செயல்பட்டு, உரு. 500-ஐத் திரட்டித் தந்த மேனாள் எரிசினம்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் தொண்டு நாடிச் சென்றவுடனேயே உரு. 500-ஐ மகிழ்வுடன் வழங்கிய மொங்க நல்லாம்பாளையம் விசைத்தறி உரிமையாளர்கள் ஈக உள்ளம் ஆகியன பெரிதும் பாராட்டப்பட வேண்டிய செய்தியாகும். இவற்றுக்கெல்லாம் உறுதுணையாக நின்று, தனது சொந்த அலுவல்களைக் கூடத் தள்ளி வைத்துவிட்டு, இரவு பகலாக ஈக உணர்வுடன் உழைப்பை நல்கிய, ஆசிரியர் பாலுச்சாமியின் தொண்டு பெரிதும் பாராட்டப்படவேண்டிய தொன்றாகும்.

— செய்தி: புலவர். அறிவுடைநம்பி.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழவுகளும பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் தலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 61] பதிவு எண் TN/MS (C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை — 5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந. முத்து குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி